# ***கமலாதேவி அரவிந்தனின் சிறுகதைகளில் வெளிப்படும் பண்பாட்டு விழுமியங்கள்: ஓர் ஆய்வு***

***ரவீந்திரன் மாரையா/ Ravindaran Maraya &***
*அஸ்வினி கண்ணப்பன்/* Ashwini Kannappan
*இந்திய ஆய்வியல் துறை /* Department of Indian Studies
*மலாயாப் பல்கலைக்கழகம் /* University of Malaya
ravindaranm@um.edu.my | ashwinikannappan.ak@gmail.com

*Manuscript received 15 April 2023*
*Manuscript accepted 18 September 2023*

**ஆய்வுச் சுருக்கம்**

*இவ்வாய்வுக் கட்டுரையானது கமலாதேவி அரவிந்தனின் 'சூரிய கிரகணத் தெரு' என்ற சிறுகதைத் தொகுப்பை மையமாகக் கொண்டுள்ளது. எழுத்தாளர் கமலா தேவி அரவிந்தனின் 'சூரிய கிரகணத் தெரு' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற சிறுகதைகளில் வெளிப்படும் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களைக் கண்டறிவது இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாக விளங்குகிறது. பண்புசார் ஆய்வின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும், ஈகை பண்பு, மூத்தவர்களை மதித்தல், சடங்கு மற்றும் நம்பிக்கைகள் மற்றும் விருந்தோம்பலும் உணவு முறைகளும் ஆகிய நான்கு முக்கியத் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்கள் இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, இவ்வாய்வின் முடிவாக, கமலாதேவி அரவிந்தனின் 'சூரிய கிரகணத் தெரு' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற சிறுகதைகளில் வெளிப்படும் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களின் வாயிலாகப் பழந்தமிழர்கள் பண்பாட்டு விழுமியங்களுடன் தற்கால சிங்கப்பூர் தமிழ்ச் சமூகத்தினர் பின்பற்றும் விழுமியங்களை ஒப்பீடு செய்தால் அதில் ஒற்றுமையும் வேற்றுமையும் காண வழிவகைச் செய்கிறது.*

**திறவுச்சொற்கள்:**

*சிங்கப்பூர் சமுதாயம், ஈகை பண்பு, சடங்கு மற்றும் நம்பிக்கைகள், விருந்தோம்பலும் உணவு முறைகளும், சிறுகதைகள்.*

## Abstract

This paper focuses on Kamala Devi Aravindan's short story collection, ' Soorya Kirahana Theru'. The primary purpose of this paper is to identify the cultural values of the Tamil Community has been appeared in a short story collection entitled 'Soorya Kirahana Theru'. This research paper is based on a qualitative analysis methodology as the primary research method. This paper identifies four significant cultural values of the Tamil Community such as helping nature, respect for elders, ritual and belief, hospitality and eating habits. This research indicates short story collection entitled 'Soorya Kirahana Theru' reflects Singapore Tamil society's cultural values that are similar and non-similar to the Cultural values of the Tamil community by the Tamil ancestors.

**Keywords:** Singapore Society, helping nature, ritual and belief, hospitality and eating habits, Short stories**.**

**முன்னுரை**

*தமிழ் இலக்கியம் தொன்மைச் சிறப்புடையது, ஏறக்குறைய முப்பது நூற்றாண்டுகளாக இலக்கியப் பயணத்தைத் தொடர்கிறது. சிங்கப்பூர் மற்றும் மலேசியத் தமிழ் இலக்கியங்கள் மலாயாத் தமிழ் இலக்கியம் என்றே சிங்கப்பூர் தனிநாடாக உருப்பெறும் வரையில் அறியப்பட்டது. தமிழ்நாடு மற்றும் இலங்கை தேசத்திலிருந்து சிங்கப்பூருக்குச் சஞ்சி கூலிகளாகக் குடியேறிய தமிழ்ச் சமூகத்தினரே*

சிங்கப்பூரில் தங்களின் பண்பாடு, கலாச்சாரம், இலக்கியம் மற்றும் மொழியை வேரூன்றினர். (மலர்விழி இளங்கோவன், 2010). சிங்கப்பூர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குச் சிறுகதை, கவிதை, நாவல் போன்ற இலக்கியங்கள் பங்காற்றியுள்ளன. சிங்கப்பூரில் தோன்றிய இலக்கியங்களில் பெரும்பாலானவைச் சிங்கப்பூர் திருநாட்டின் பின்னணியும் அவ்விடத்தில் வாழ்ந்த வாழ்கின்ற மக்களின் நிலைப்பாட்டைச் சித்தரிக்கும் வகையில் வரையப்பட்டுள்ளது.

சிங்கப்பூர் இலக்கியத்தில் தனிச்சிறப்புடைய படைப்பிலக்கியமாக சிறுகதை இலக்கியம் போற்றப்படுகிறது. அவ்வகையில் சிங்கப்பூர் திருநாட்டின் முதல் சிறுகதைத் தொகுப்பான வினோத சம்பாஷனை 1888 ஆம் ஆண்டு மகுதூம் சாயபு என்பவரால் எழுதப்பெற்றது. அதன்பின் பல படிநிலை முயற்சிகளுக்குப் பின் 1950 ஆம் ஆண்டு தமிழ் முரசு நாளிதழில் சுப நாராயணனால் தொடங்கப்பட்ட 'இரசனை வகுப்பு' வாயிலாகப் புதிய சிறுகதை எழுத்தாளர்கள் எழுச்சி பெற்றனர். தொடர்ந்து, 1952 ஆம் ஆண்டு கோ. சாரங்கபாணி அவர்களால் தோற்றுவித்த தமிழர் திருநாளும், மாணவர் மணிமன்றமும் சிங்கப்பூரின் தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியது. இதன் வாயிலாக எழுச்சி பெற்ற எழுத்தாளர்களான பி. கிருஷ்ணன், ந. பழநிவேலு, சிங்கை தமிழ்ச்செல்வம், ஏ.பி.சண்முகம், இராம. கண்ணபிரான் போன்றோர் சிங்கப்பூர் மக்களின் வாழ்வியலை மிக அழகாகச் சிறுகதைகளில் பதிவு செய்துள்ளனர். சான்றாக, கமலாதேவி அரவிந்தனின் நுவல், கரவு, சூரிய கிரகணத் தெரு, திருமதி. நூர்ஜஹான் சுலைமானின் 'தையல் மிஷின்' போன்ற சிறுகதைகள் எதிர்பார்ப்புக்கும் அப்பால் பல புதிய கருத்துகளை மக்களின் மத்தியில் முன்னிறுத்தின.

கமலாதேவி அரவிந்தன் போன்ற எழுத்தாளர்கள் தோன்றியிருப்பது துருவநட்சத்திரத்தைப் போன்றதாகும்' என்று பலரால் போற்றப் பெற்றவரும், சிங்கப்பூர் இலக்கியத்தில் முத்திரைப் பதித்த சிங்கையின் முன்னணி எழுத்தாளராக மிளிரக்கூடியவர் எழுத்தாளர் கமலாதேவி அரவிந்தன். தனது இலக்கியப் பயணத்தில் சிறுகதைகள், நாவல்கள், நாடகங்கள், ஆய்வுக்கட்டுரைகள் என எண்ணற்ற இலக்கிய வகைமைகளை மலையாளம் மற்றும் தமிழ்மொழியில் படைத்து உயிரோட்டம் வழங்கியவர். இலக்கியத்தில் இலக்கணத்தின் மரபை உடைத்து இலக்கியத்தின் நடை, கருத்தியல், மொழி, போன்ற அனைத்திலும் நவீனத்துவத்தைப் புகுத்தித் தனது எழுத்தின் கூர்மையாலும் சிறப்பினாலும் பல விருதுகளைப் பெற்றவர். அவ்வகையில் எழுத்தாளர் கமலாதேவி அரவிந்தனின் சிறுகதைகளில் இடம்பெறும் கதைக்களங்கள், தமிழ் சமுதாயம் ஆழ உணர்ந்து கொள்ளும் வகையில் பண்பாட்டு விழுமியங்களுடன் பதிவுகள் செய்யப்பட்டிருக்கின்றன. (முனைவர் எச். முஹம்மது சலீம், 2013).

**கட்டுரை நோக்கம்**

எழுத்தாளர் கமலா தேவி அரவிந்தனின் 'சூரிய கிரகணத் தெரு' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற சிறுகதைகளில் வெளிப்படும் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களைக் கண்டறிவது இவ்வாய்வுக் கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

**ஆய்வு நெறி**

இவ்வாய்வுக் கட்டுரை தரப்பகுப்பாய்வு (qualitative) நெறியை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஆய்வாளர் 'நூல் பகுப்பாய்வு' முறையை ஆராய்ச்சிக்கான முதன்மை வழிமுறையாகத் தேர்ந்தெடுத்துள்ளார். ஏனெனில், தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகளை ஆழமான ஆய்வுக்கு உட்படுத்த உள்ளடக்க ஆய்வையும் இம்முறை கொண்டுள்ளது (Peter Goodrich, 1986). உள்ளடக்க ஆய்வு முறையின் வழி சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்களைக் கண்டறிய இயல்கிறது. ஆகவே, ஆய்வு நோக்கங்களை அடைவதற்கு 'சூரிய கிரகணத் தெரு' என்ற சிறுகதைத் தொகுப்பைக் களமாகக் கொண்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**ஆய்வு முன்னோடி**

இந்த ஆய்வுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்த பல ஆய்வுக்கட்டுரைகளில் மிக முக்கியமாக விளங்குவது சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள் என்ற தலைப்பில் 2017 ஆம் ஆண்டு முனைவர் கோ. வசந்தி மாலாவின் கைவண்ணத்தில் எழுதப்பெற்ற ஆய்வுக்கட்டுரை. இந்த ஆய்வுக் கட்டுரையில் சங்க இலக்கியத்தில் வெளிப்படும் பழந்தமிழர்களின் பண்பாட்டுக் கூறுகளை ஆய்வு செய்துள்ளார். தனிமனிதப் பண்பாடு, சங்க கால விருந்தோம்பலும் பண்பாடும், தமிழரின் காதல்

வாழ்க்கையில் பண்பாட்டுக் கூறுகள், சங்க கால மகளிரின் அரசியலறிவும் பண்பாடும், போர் புரிதலில் நாகரிகமும் பண்பாடும், காலமறிந்து போர் புரியும் பண்பு ஆகிய பண்பாட்டுக் கூறுகளை இவ்வாய்வின் கண்டுபிடிப்பாகக் காண இயல்கிறது. இதன் வாயிலாகச் சங்க கால மக்கள் உயர்ந்த பண்பாட்டினை இவ்வுலகிற்குப் பரிசளித்தவர்கள் என்ற கருத்தைக் கோடிட்டுக் காட்டுகிறார்.

**பண்பாட்டு விழுமியங்கள் - விளக்கம்**

பண்பாடும் பண்பாட்டு விழுமியமும் நுண்மையான பொருள் வேறுபாடு உடையவை (ஜெ. ஜெயமதி, 2013). பண்பாடு என்பது ஒரு சமுதாயத்தில் அமைந்துள்ள கலை, நம்பிக்கை, பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், விழுமியங்கள் எனக் கருதப்படுகிறது. பண்பாட்டு விழுமியங்கள் என்ற பதம் பண்பாட்டுச் சமூகவியலாளர்களால் உருவாக்கப்பட்டது. சமூகவியலாளர்கள் பண்பாட்டை மூன்று வகையாக வகுக்கின்றனர். மனிதன் தன் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யும் முறைகளினால் வெளிப்படும் பண்பாடு. இவ்வகை பண்பாட்டை ஒரு சமுதாயத்தினரின் உடை, உணவு ஆகியவையிலிருந்து அறிந்து கொள்ள இயலும். தொடர்ந்து, கல்வி கேள்வி வழியாகப் பேணப்படும் பண்பாடு. சான்றாக, பெற்றோர்கள் மூலமாகப் பண்பாட்டை அறிதல், தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளின் வாயிலாகப் பெறப்படும் பண்பாட்டுக் கூறுகள். மேலும், குறியீடுகளைப் பயன்படுத்துவதின் வாயிலாக வெளிப்படும் பண்பாடு. உதாரணத்திற்கு, பெண்கள் அணியக்கூடிய தாலி, மெட்டி ஆகியவையிலிருந்து கண்டறிவது. மேலும், ஒரு பண்பாட்டைச் சார்ந்தவர்களுக்கும் வாழ்வியலுக்கும் எவை அவசியமாகிறதோ அவையே ஒரு பண்பாட்டின் விழுமியமாகக் கருதப்படுகிறது. சுருங்கக் கூறின், மக்கள் எவற்றைச் சமூக மேம்பாட்டிற்கு, சமூக நன்மைக்கு உகந்தவை, முக்கியமானவை எனக்கருதி மதிப்பு அளிக்கிறார்களோ, அவையே பண்பாட்டு விழுமியங்கள் எனப்படுகிறது (ஜெயமதி, 2013).

**ஈகை பண்பு**

பழந்தமிழர்களின் மிகச்சிறந்த பண்பாட்டு விழுமியங்களில் முதன்மையிடம் வகிப்பது ஈகை பண்பாகும். பொருள் அற்றவர்களுக்கு உணவு, மருந்து, உறைவிடமும், உடையும் வழங்குபவர்களே பண்டைய பண்பாடு உடைய அறிஞர்களாகப் போற்றப்படுகிறார் என்ற சிந்தனையைச் சங்க இலக்கிய பாடல்கள் எடுத்துரைக்கிறது. சான்றாக,

"...................................... அற்றார்கட்கு,
உண்டி, உறையுள், உடுக்கை இவை ஈந்தார்-
பண்டிதராய் வாழ்வார், பயின்று" ( ஏலாதி,பாடல் 6)

இப்பாடலின் வாயிலாக ஈகை பண்பாடு பழந்தமிழர்களின் மத்தியில் இடம்பெற்றதைக் காண இயல்கிறது. அவ்வகையில், கமலாதேவி அரவிந்தனின் சிறுகதைகளில் பண்பாட்டு விழுமியமான ஈகை பண்பை பல்வேறு கோணங்களில் காண இயல்கிறது. அதற்கு வலுசேர்க்கும் வகையில், 'உத்தமி' என்ற சிறுகதையில் சிங்கப்பூரில் கைவிடப்பட்ட முதியவர்களை இலவசமாகப் பார்த்துக் கொள்வதற்குக் காப்பகம் அமைத்துப் பல முதியவர்களுக்கு இன பேதமற்று தங்கும் இடம், உணவுகள், மருத்துவ வசதிகள் செய்து கொடுப்பதையும் அதில் தன்னார்வலராக இணைந்து பணியாற்றும் தமிழ்ச் சமூகத்தை எழுத்தாளர் காட்டியுள்ளார். சான்றாக, 'கணவனின் கொடுமைகளைத் தாளாமல் சிராங்கூன் சாலையில் நள்ளிரவிலும், நடைபாதையில் படுத்துக் கிடக்கும் (மகேஸ் அம்மாவை) தன்னார்வத் தொண்டர்கள் காப்பகத்தில் கொண்டு வந்து சேர்த்தனர்'. அதேவேளையில், 'தொலைதூரம்' என்ற சிறுகதையில், ராஜுவின் தாய் இயற்கை எய்தியதை அறிந்த சக அலுவலகத்தில் தொழில் புரியும் சகாக்கள் தங்களால் இயன்ற தொகையை வழங்கி உதவி புரியும் தன்மையைக் காண இயல்கிறது. தொடர்ந்து, 'புரை' என்ற சிறுகதையில் மனைவி இறந்ததின் பின் பெரியசாமி என்ற முதியவரைப் பிள்ளைகள் கவனித்துக் கொள்ள தவறியபோது மகேஸ்வரி என்ற பெரியவரின் நண்பரின் மகள் அவருக்குப் பிடித்த உணவுகளைச் சமைத்துக் கொடுத்து உதவினார். சான்றாக, 'ரொம்ப நாட்களாகத் தாத்தா சாப்பிட ஏங்கிய கருவாட்டுக் குழம்பு, கிச்சாப் கோழி சமைத்து வந்துக் கொடுப்பார்'. இவ்வரிகளின் வாயிலாக ஈகை பண்பை காண இயல்கிறது. தொடர்ந்து, சிங்கப்பூரில் பிறநாட்டிலிருந்து குடியிருக்கும் தமிழ் சமுதாயத்தினர்களின் வாழ்வியலிலும் உதவும் பண்பை 'நுளம்பு' என்ற சிறுகதையில் எழுத்தாளர் வெளிப்படுத்தியுள்ளார். சான்றாக, 'உடல் உபாதைக்கு ஆளான மச்சக்காளைக்கு தாவூது என்கிற புரோட்ட கடை வைத்திருப்பவரின் மனைவி ரசம் சமைத்துக்

*கொடுத்தது சகோதரத்துவத்துடன் உதவி செய்வதைக் காண இயல்கிறது. ஆகவே, சிங்கப்பூர் தமிழர்களின் வாழ்வியலிருந்து ஈகை பண்பை காண இச்சிறுகதைகள் வழிவகைச் செய்கிறது. ஆகவே இச்சிறுகதைகளின் வாயிலாகப் பழந்தமிழர்களைப் போலவே தற்கால சிங்கப்பூர் வாழ் தமிழர்களும் ஈகை பண்புடன் செயல்படுவதைக் காண இயல்கிறது.*

**மூத்தவர்களை மதித்தல்**

*'மூத்தோர் சொல்லும் முது நெல்லிக்கனியும் முதலில் கசக்கும்; பின்னர் இனிக்கும்' என்பார்கள் ஆகவே அனுபவமிக்க மூத்தவர்களை வணங்குதலும் அவர்களைப் போற்றலுமே தமிழர்களுடையப் பண்பாடு. சிங்கப்பூர் சமுதாயத்தினர் மத்தியில் பெற்றோர்களை மதிக்கத் தவறும் பிள்ளைகளைக் கமலாதேவி அரவிந்தன் தன்னுடையச் சிறுகதையின் வாயிலாகச் சுட்டிக்காட்டுகிறார். அவ்வகையில், 'புரை' என்ற சிறுகதையில் பெரியசாமி என்ற பெரியவருக்குப் பிடித்த உணவுகள், ஆறுதலான வார்த்தைகள், உடல் உபாதையின்போது கவனிப்பு ஆகிய எவ்வித உறுதுணையும் பிள்ளைகளிடமிருந்து கிடைக்கவில்லை. சான்றாக, 'எவ்வளவு நாள் ஆகிவிட்டன இவன் என்னிடம் பேசி அந்த ஞாபகம் கூடவா இவனுக்கு இருக்காது? நாளைக்கு இவனுக்கும் வயசாகும்' என்று பெரியவரின் மனவோட்டத்திலிருந்து அறிந்து கொள்ள இயல்கிறது. மேலும், ராமசாமி தாத்தாவுக்குப் பிடித்த உணவை வழங்காமல், துரித உணவான, பெயரே தெரியாத பிட்சா, பர்கர் போன்ற உணவுகளை உணவளித்தனர். அதுமட்டுமில்லாமல் தாத்தாவை வார்த்தைகளால் கீழ்த்தரமாகப் பேசி அவரைத் தற்கொலைச் செய்வதற்குக் காரணமாக மருமகளின் சகித்துக் கொள்ள இயலாத சொல்லாடல்கள். சான்றாக, 'வெக்க கேடுங்க மொதல்ல, கிழத்துக்கு ஒரு பொண்ணைப் பார்த்துக் கட்டி வைக்கணும். பல்லும் சொல்லும் எல்லாம் போனாலும் கிழத்துக்கு ஆசை மட்டும் போகல'. இதுப் போன்ற சிக்கலும் சிங்கப்பூர் சமுதாயத்தினர் மத்தியில் நிகழ்கிறது என்பதற்கு இச்சிறுகதைச் சான்றாக அமைகிறது. அதேவேளையில்,'உத்தமி' என்ற சிறுகதையில் மகேஸ்வரி அம்மாவுக்கு உடல் உபாதைகள் ஏற்பட்ட வேளையில் நான்குப் பிள்ளைகளும் அவரின்மீது அக்கறைச் செலுத்தாமல் வீட்டிற்குப் பணியாளரை நியமித்தனர். அதன்பிறகு, தாய் சிராங்கூன் சாலை ஓரத்திலிருந்து காப்பகத்திற்குக் கொண்டு வரப்பட்ட இவ்வளவு காலங்கள் ஆகியும் பிள்ளைகள் தன் தாயைப் பற்றிய தகவல்களைக் கண்டறிய முட்படவில்லை. இக்கூற்றிலிருந்து தற்போதைய காலத்தில் தமிழர்களின் பண்பாட்டை மறந்து மூத்தோர்களுக்கு மதிப்பளிக்காத தன்மை உயர்ந்து வருவதைச் சிறுகதைகளின் வழி காண இயல்கிறது.*

*'பெரியாரைப் பேணாது ஒழுகிற் பெரியாரால்*
*பேரா இடும்பை தரும்'. (பெரியாரைப் பிழையாமை, 892)*

*என்ற திருக்குறளுக்கேற்ப பெரியோர்களை மதிக்காமல் நடந்து கொண்டால் நீங்காத பெருந் துன்பத்தை அடைய வழிவகுக்கும் என்பதை அறிந்த நடந்துக் கொள்ள வேண்டும் என்ற திருக்குறளின் சாரத்தை மேற்கண்ட சிறுகதையின் சாரத்துடன் பொருத்திப் பார்க்க இயல்கிறது. இதன் வாயிலாகப் பழந்தமிழர்களின் பண்பாட்டைப் பின்பற்றாத சூழ்நிலை நிலவுவதைக் காண இயல்கிறது. ஆகவே, பெரியோர்களை மதித்து வாழ வேண்டும் என்ற என்ற சிந்தனையைக் கொண்டிருப்பது மிக அவசியம்.*

**சடங்கு மற்றும் நம்பிக்கைகள்**

*தமிழர்கள் பண்பாடுகளில் நிமித்தம் பார்க்கும் வழக்கம், சகுனம் பார்த்தல், தெய்வ வழிபாடுகள் போன்றவை பண்பாட்டு மரபாகவே காணப்படுகிறது. சுப மற்றும் அசுப காரியங்களுக்கு நாள் கிழமை, நேரம் பார்க்கும் வழக்கம் சங்க இலக்கியத்தின் பல்வேறு பகுதிகளில் காண இயலுகிறது. சான்றாக,*

*"நெறி அறி செறி குறி புரி திரிபு அறியா அறிவனை முந்துறீஇ*
*தகை மிகு தொகை வகை அறியும் சான்றவர் இனம் ஆக"*
*(கலித்தொகை, பாடல் 39)*

இக்கலித்தொகை பாடலிருந்து பெண் கேட்டு வருதலுக்கும் திருமணத்திற்கு நல்ல நேரம், காலம் குறிப்பதிலிருந்து நிமித்தம் பார்க்கும் வழக்கத்தை அறிய இயல்கிறது. சிங்கப்பூர் தமிழ் சமுதாயத்தினர் தங்களின் வாழ்வியலில் தமிழர்களின் சடங்கு மற்றும் நம்பிக்கைகளைப் பின்பற்றுவதை எழுத்தாளர் சிறுகதைகளின் வழி சுட்டிக்காட்டியுள்ளார். இக்கூற்றுக்கு வலுசேர்க்கும் வகையில், 'கறுப்புப்பூனை' என்ற சிறுகதையில் பூனை குறுக்கே சென்றாலோ, கறுப்புப் பூனைக் கண்டாலோ சகுனம் பார்க்கும் வழக்கமும் நம்பிக்கையும் காண வழிவகுக்கிறது. மேகநாதன் தன் வாழ்வில் நடக்கும் சிக்கலுக்கு அந்தக் கறுப்புப் பூனையின் வருகையாகப் பார்கிறான். சான்றாக, பூனைக் குறுக்கே போனாலே அபசகுனம், அதிலேயும் இதுக் கறுப்புபூனை நடுவீட்டுக்குள்ளையே வந்து நிக்குது. எனவே, கற்பமாக இருக்கும் மனைவிக்கும் குழந்தைக்கும் ஆபத்து வந்துவிடுமா? என்று அஞ்சுகிறான். அதேவேளையில் 'புரை' என்ற சிறுகதையில் இறப்பிற்குப் பிறகுச் செய்யும் சடங்கின்மீது நம்பிக்கைக் கொள்ளும் வழக்கத்தைக் காண இயல்கிறது. சான்றாக, 'சனிப்பொணம் தனியாகப் போகாது' என்று கூடவே அதற்கான பரிகாரத்தையும் செய்ய வைத்தே பெரியசாமி தாத்தாவை, மண்டாய் சுடுகாட்டில் நல்லடக்கம் செய்தனர். இதன் வாயிலாகச் சிங்கப்பூர் தமிழ் சமுதாயத்தினரின் வாழ்வியலில் சடங்குகள் மற்றும் நம்பிக்கைகள் இணைந்து இருப்பதைக் காண இயல்கிறது. தொடர்ந்து, சிங்கப்பூரில் பணிக்காக் குடிக்கொண்டிருக்கும் தமிழ் சமுதாயத்தினர் வாழ்வியலிலும் தெய்வ நம்பிக்கையைக் காண இயல்கிறது. 'நுளம்பு' என்ற சிறுகதையில் குலதெய்வத்திடம் தலைமுடியைக் காணிக்கைச் செலுத்துவதாக வேண்டிக் கொள்வதின் வாயிலாக விளங்கி கொள்ள இயல்கிறது. இதன் வாயிலாகச் சிங்கப்பூரில் குடியுரிமைப் பெற்றவர்களும் வெளிநாடுகளிலிருந்து சிங்கப்பூரில் பணிப் புரியும் தமிழர்களின் வாழ்வியலில் சடங்கு மற்றும் நம்பிக்கை முக்கிய இடம் வகிப்பதை காண இயலுகிறது. ஆகவே, பழந்தமிழர்களின் சடங்கு மற்றும் நம்பிக்கைகள் தமிழர்கள் மத்தியில் திழைத்திருப்பதை உறுதி செய்ய இயல்கிறது.

**விருந்தோம்பலும் உணவு முறையும்**

தமிழர்களின் பண்பாட்டில் விருந்தோம்பல் மரபு தனியிடம் பெறுகின்றது. விருந்தோம்பல் என்பது ஒருவருக்கு உணவு அளிப்பது மட்டுமல்ல உண்ட உணவினால் வயிறு எப்படி நிறைகிறதோ அதேபோல் மனமும் நிறைந்திருக்க வேண்டும். உணவும் உபசரிப்பும் கலந்ததே விருந்தோம்பல். சான்றாக,'

''அல்லி லாரினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியற் குறுமகள்''. (நற்றிணை, 142)

நற்றிணை பாடலில் இடம்பெறும் வரிகளில் இரவு நேரத்தில் வருகைப் புரிந்த விருந்தினர்களுக்குத் தலைவி முகம் மலர இன்முகத்துடன் உபசரிக்கும் பண்பு உடையவர்கள். அவ்வகையில், கமலாதேவி அரவிந்தன் தன் சிறுகதையில் விருந்தோம்பலின் சிறப்பையும் மாண்பையும் எடுத்துரைக்கிறார். 'மாம்பழப் புளிசேரி' என்ற சிறுகதையில் பார்கவி நுனி வாழை இலையில் ஆவி பறக்கும் அளவிலும் இலை நிறைந்து வழிய வீட்டிற்கு வருகைப் புரிந்த அயலாருக்கு வாழை இலை நிறையும் அளவிற்கு மகிழ்ந்து மகிழ்ந்து பரிமாறினாள். அவளது 'மனசெல்லாம் அப்படி மலர்ந்து கிடந்தது' என்ற வரிகளில் காண இயல்கிறது. மேலும், 'ஒருநாள், ஒரு பொழுது!' என்ற சிறுகதையிலும் கொல்லையில் மண்சுவர் எழுப்ப வந்த காசாண்டியைக் கொல்லையின் உரிமையாளர் 'சாப்பிட்டிய தம்பி' என்று பரிவோடு கேட்டவுடன் காசாண்டி மெய்லிசிரித்து போனார். அதுமட்டுமின்றி, வயற்காட்டில் வேளைக்கு வருபவர்களுக்குக் காய் போட்டு குழம்புடன் உணவளிக்கும் தன்மையிலிருந்து விருந்தோம்பலைக் காண இயல்கிறது. தொடர்ந்து, பழந்தமிழர்கள் தங்களின் திணைகளில் விளையும் சத்துக்கள் நிறைந்த உணவுகளை உண்டனர். ஆனால் 'புரை' என்ற சிறுகதையில் அதிகளவு துரித உணவை உட்கொள்ளும் பழக்கம் தமிழர்கள் மத்தியில் உயர்ந்து வருகிறது என்பதை எழுத்தாளர் கோடிட்டு காட்டுகிறார். சான்றாக, மொறுமொறு கெண்டாக்கி சிக்கனும், ஃப்ரென்ச் ஃப்பரையும் ஸ்மேஷ் பொட்டோஸும், பசி வருவதற்கு முன் நொறுக்குத் தீனியாகச் சிப்ஸ் போன்ற உணவுகளை அதிகளவு எடுத்துக் கொள்வதால் உடற்பயிற்சிகளை மேற்கொண்டும் சசிரேகாவால் உடல் பருமனைக் குறைக்க இயலவில்லை. 'புரை' என்ற சிறுகதையில் 'நாகரீகத்தின் எல்லையில் பிசாவும், பர்கரும், கே.எப்.சி யும் சிக்கன் டிக்காவும் வீட்டில் புழங்க ஆரம்பித்தது' என்ற கூற்றின் வாயிலாகத் துரித உணவுகளை

*அதிகளவு உண்ணும் பழக்கத்தைக் காண வழிவகைச் செய்கிறது. பழந்தமிழர்களின் விருந்தோம்பல் பண்பாட்டு மரபுகளைச் சிங்கப்பூர் தமிழ் சமுதாயத்தினர் பின்பற்றுவதைக் காண இயல்கிறது அதே வேளையில் தமிழர்களின் பண்பாட்டு நிறைந்த உணவுகளை உண்ண வேண்டும் என்ற சிந்தனையையும் காண இயல்கிறது.*

**முடிவுரை**

*இறுதியாக, கமலாதேவி அரவிந்தனின் சூரிய கிரகணத் தெரு' என்ற சிறுகதைத் தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகளில் ஈகை பண்பு, மூத்தவர்களை மதித்தல், சடங்கு மற்றும் நம்பிக்கைகள் மற்றும் விருந்தோம்பலும் உணவு முறைகளும் ஆகிய நான்கு முக்கியத் தமிழர்களின் பண்பாட்டு விழுமியங்கள் கண்டறியப்பட்டுள்ளது. அதுமட்டுமில்லாமல் பழந்தமிழர்கள் பண்பாட்டு விழுமியங்கள் தற்கால சிங்கப்பூர் வாழ் தமிழ் சமூகத்தினர் மத்தியில் இருக்கின்றது என்ற கேள்விக்கும் விடையாக அமைந்துள்ளது, பழந்தமிழர்கள் பண்பாட்டு விழுமியங்களுடன் தற்காலச் சிங்கப்பூர் தமிழ்ச் சமூகத்தினர் பின்பற்றும் விழுமியங்களை ஒப்பீடு செய்தால் அதில் ஒற்றுமையும் வேற்றுமையும் காண வழிவகைச் செய்கிறது.*

***Reference***


Kamaladevi,A. (2012 ). Suriya Grahana Theru . Chennai.

Malarvele, I. (2010). *சிங்கப்பூரில் தமிழ் இலக்கிய வளர்ச்சி*. Biblioasia.

Maraya, R., & Kasturi, K. (2022). *கவியரசு கண்ணதாசன் பாடல்களில் இலக்கியக் கூறுகள்: ஒரு பார்வை. Journal of Indian Studies (இந்திய ஆய்விதழ்)*, *15*(1), 65-71.

Maraya, R., Ramasamy, M. D., & Kannappan, K. (2021). *'கெங்கம்மாவின் புதுமைப் பெண்'என்ற சிறுகதையில் சித்தரிக்கும் தற்கால பாரதி கண்ட புதுமைப் பெண்: ஓர் பார்வை* Bharathiyar's portrayal of a novel woman in contemporary society in the short story of 'Gengammavin Pudhumai Penn': A Review. Journal of Tamil *Peraivu (தமிழ்ப் பேராய்வு ஆய்விதழ்),* 10(2), 77-83.

Peter Goodrich. (1986). Reading the Law: ACriticul Introduction to Legal Method and Technique. U.K.: Blackwell Publishers.

*முஹம்மது சலீம், எச்.சிங்கப்பூர் சிறு கதைகளில் மிளிரும் தமிழர் பண்பாட்டு விழுமியங்கள், https://www.geotamil.com/index.php*

*வசந்திமாலா, கோ. ஆய்வு: சங்க இலக்கியத்தில் தமிழர் பண்பாட்டுப் பதிவுகள், https://www.geotamil.com/index.php*

*ஜெயமதி.ஜ. (2013 ). பண்பாட்டு விழுமியங்கள்.மதுரைத் தமிழ்ச் சங்கம், 10-1.*